[15th March 1961

SRI S. M. ANNAMALAI : ஸார், திருவண்ணாமலையில் சர்க்கரை ஆலை ஏற்படுத்துவதைப் பற்றிச் சொன்னார்கள். திருவண்ணாமலையில் சர்க்கரை ஆலை ஏற்படுத்தவேண்டுமென்று அங்குள்ள மக்கள் சொன்னார்கள். சர்க்காரும் ஷேர் சேருங்கள் என்று சொன்னார்கள். அதன் பிரகாரம் ஷேர் சேர்த்தார்கள். அப்படி இருந்தும் ஏன் இது கைவிடப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதெல்லாம் கைவிடப் படவில்லை. ஒவ்வொரு சமயத்திலும் அகில இந்திய ரீதியில் சர்க்கரை ஆலைகள் கொடுக்கப்படுகிறது. நமது தேவையை உத்தேசித்து நமக்கு எத்தனை கிடைக்கும் என்று பார்க்கிறோம். சிபாரிசு செய்கிறபோது ப்ரையாரிட்டி பிரகாரம் செய்கிறோம். இந்த ப்ரையாரிட்டி பின்னால்தான் வரும்.

SRI A. VEDARATHNAM : நம் மாநிலத்தில் இதற்கு முன் லைஸென்ஸ் வழங்கப்பட்ட எத்தனை ஆலைகள் வேலை துவங்காமல் இருக்கின்றன ? லைஸென்ஸ் பெற்றும் துவங்காமல் இருக்கக் காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் இப்போது சொன்ன 8 ஆலைகளுக்கும் லைஸென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது, ஆனால் இன்னும் வேலை துவங்கவில்லை.

SRI S. NAGARAJA MONIGAR : நமது ராஜ்யத்தில் சர்க்கரை ஆலை ஏற்கெனவே ஏற்பட்டது போக இப்போது ஏற்படுத்த பல பேர்கள் முன் வருகிறார்கள். லாபம் அதிகமாக இருக்கிறது என்று ஆரம்பிக்க முன் வருகிறார்களா ? அல்லது தேசபக்தி காரணமாகவா ? லாபம் அதிகமாக வருகிறது என்றால் சர்க்கரையின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது நெல் உற்பத்தி செய்வதைவிட கரும்பு உற்பத்தி செய்தால் அதிகப்படி லாபம் கிடைக்கிறது. அதன் காரணமாக நிறைய உற்பத்தியை செய்ய முன் வருகிறார்கள்.

SRIMATHI KAMALAMBUJA AMMAL : கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி மூலமாக ஆரம்பிக்கப்படும் ஆலைகளுக்கு உதவி யந்திரங்களாகக் கொடுக்கப்படுகிறதா ? அல்லது ரொக்கமாகக் கொடுக்கப்படுகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நாம் ரொக்கமாகத் தான் கொடுக்கிறோம்—யந்திரங்கள் வாங்குவதற்காகத்தான் கொடுக்கிறோம். அதை வாங்கி வேறு எதற்கும் உபயோகப்படுத்தி விட மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

Sugar factory workers

* 852 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the minimum wage, if any, fixed by the Central Wage Board for the workers in sugar factory; and

15th March 1961]

(*b*) how many workers are working in the sugar factories in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Wage Board has recommended a minimum wage of Rs. 81 consisting of Rs. 60 basic wage and a dearness allowance of Rs. 21.

(*b*) Four thousand two hundred and fifty five workers are employed in the Sugar Factories in this State.

SRI T. T. DANIEL : May I know whether this minimum wage is in force in Madras State?

THE HON. SRI R. VENKATARAMAN : The Commissioner of Labour in taking steps to implement the recommendation.

SRI T. KARIA GOUNDER : மத்திய சர்க்கார் இந்த சர்க்கரை ஆலைகளில் வேலை செய்கின்ற ஆட்களுக்கு கூலி நிர்ணயம் செய்திருப்பதை இதுவரை சர்க்கரை ஆலைகளில் அமுலுக்கு கொண்டுவரவில்லை. இதன்மேல் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : ரிப்போர்ட் இப்போது தான் வந்திருக்கிறது. அதைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டு சில நாட்கள்கூட ஆகவில்லை.

Price of sugar

* 853 *Q.*—SRI A. A. RASHEED :
SRI S. M. ANNAMALAI : } Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have recommended to the Union Government to reduce the price of sugar of inferior quality?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, sir.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware of the fact that the sugar now supplied is yellowish in tinge and contains more impurities? May I know, Sir, why the public should be asked to pay for the impurities in sugar?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are impurities in the sugar. If they are not interested in purchasing that sugar referred to by the hon. Member they are not required to purchase it. Whatever sugar is available, it is distributed for sale.

SRI S. M. ANNAMALAI : ஸார், சர்க்கரையின் விலையைக் குறைப்பதற்கு சர்க்கார் உத்தேசித்திருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது சர்க்கரை விலையை நிர்ணயிப்பதற்கு உத்தேசமில்லை. அதற்கு ஸ்டாசுடரி பிரைஸ் கண்ட்ரோலும் கிடையாது.